

திருவள்ளூர் மத்திய மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் வாசுகி எட்வின் உடல் நலக்குறைவால் இல்லத்தில் ஓய்வு பெற்று வரும் நிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நெமிலிச்சேரியில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜே.ரமேஷ், ஒன்றிய செயலாளர் சே. பிரேம் ஆனந்த், மாவட்ட தொண்டர் மகளீர் அணி அமைப்பாளர் கு.தமிழ்செல்வி, கவுன்சிலர்கள் கேட்டரிங் சுரேஷ், எஸ்.ஒய்.தாஸ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இ.வி.பி.பிரதீப் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ‘கழகத்தின் வேர்களைத் தேடி’ என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, திருத்தணி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட செருக்கானூர் கிளைக் கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் நேரில் சந்தித்து, கழகப் பணிகளை மேலும் வலுப்படுத்துவது, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்துவது, அரசின் மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் கே. இராஜேந்திரன், கிளைச் செயலாளர்கள் முனுசாமி, சத்தியநாதன் உள்பட பலர் உள்ளனர்.

### தி.மு.கழகத்தின் மூத்த முன்னோடி – முன்னாள் அமைச்சர் சி.வி.எம்.அண்ணாமலை மருமகன்

# டி.எம்.கோதண்டன் மறைவு!

## ஆவடி சா.மு.நாசர் - மாதவரம் எஸ்.சுதர்சனம் - கழகத்தினர் அஞ்சலி!

திருவள்ளூர், ஜூலை.25-

நினைவில் வாழும் ஆவடி தெய்வ சிகாமணி அவர்களின் மகனும் காஞ்சிபுரம் முன்னாள் அமைச்சர் சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் மகள் திருமதி.முல்லை அவர்களின் கணவருமான டி.எம்.கோதண்டன் அவர்கள், வயது 82, உடல் நலக் குறைவால் 22.07.2026, புதன்கிழமை அன்று, இயற்கை எய்தினார்.



1968ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள்முதலமைச்சராக இருந்தபோது, சிகிச்சை பெற அமெரிக்காவுக்கு செல்லும் முன் அவரது தலைமையில் டி.எம்.கோதண்டம் - திருமதி. முல்லை ஆகியோரின் திருமணம் நடைபெற்றது. அதே வழியில் அவரது இல்லத்தில் நடைபெற்ற திருமணங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆவடி நகர கழகத்தில் முன்னோடிகளில் ஒருவராக விளங்கிய இவர், ஆவடி நகர கழகத்தில் மாவட்ட பிரதிநிதி, வட்டக் கழக செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை ஏற்று கழகப் பணியாற்றியவர். 1993 ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த போது, கழக தலைவருக்கும், கழகத்திற்கும், உண்மையான விசுவாசியாகவும், ஆவடி நகரத்தில் கழகத்திற்கு உறுதி மிக்கவராய் விளங்கியவர்.

அச்சூழலில் ஆவடி நகரத்தில் நடைபெற்ற கழக பொதுக் கூட்டங்களுக்கு அன்றைய இளைஞரணிச் செயலாளராய் பொறுப்பு வகித்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள் இவரது இல்லத்திற்கு சென்று உணவு அருந்தி மகிழ்ந்து சென்ற காலங்களை தனது இறுதி காலம் வரையும் பெருமிதத்தோடு குறிப்பிட்டுக் கொண்டே இருந்தவர்.

1996ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆவடி நகர மன்றத் தேர்தலில் நகர மன்ற உறுப்பினராய் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதி மக்களுக்குக்காக திறம்படபணியாற்றி நன்மதிப்பை பெற்றவர். அப்போது நகரமன்றத்தின் நியமனக் குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

அவரை தொடர்ந்து மகன்கள் கோ.மாறன் மற்றும் சத்யா கோ.ரவி ஆகியோரும் கழகத்தில் ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகின்றனர்.

சத்யா கோ.ரவி அவர்கள் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஆவடி மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்டு 40 வது வார்டு மாமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு மக்கள் பாராட்டும் வகையில் பணியாற்றி வருகிறார்.

இவர் ஆவடி மாநகர கழகத்தில் 42ஆவது வட்ட கழகச் செயலாளராகவும் செயல்பட்டு வருகிறார். கழகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராய், மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் அவர்களின் நம்பிக்கைக்குரியவராய் விளங்குகிறார்.

மறைந்த டி.எம். கோதண்டன் அவர்களின் உடலுக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், கழக கொள்கை பரப்புச் செயலாளரும், முன்னாள் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசன், வி.சி.க பொருளாளர் எஸ்.எஸ். பாலாஜி, காஞ்சி நகர முன்னாள் செயலாளர் சி.வி.எம்.ஏ.சேகரன் மற்றும் ஆவடி மாநகர மேயர் கு.உதயக்குமார், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி செயலாளர்கள் கோ. ராஜேந்திரன், பொன், விஜயன், பேபி சேகர், நாராயண பிரசாத் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், ஆவடி மாநகரத்தின் அனைத்துக் கட்சியின் முக்கிய தலைவர்களும், ஆவடி மாநகர வணிகர் சங்க நிர்வாகிகளும், பொதுமக்களும் பெருந்திரளாக வந்து மலரஞ்சலி செலுத்தியும், 23.07.2026 வியாழக்கிழமை அன்று மாலை நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றும் தங்களது இறுதி மரியாதையை செலுத்தினர்.



மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்று வருவதை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, துணை மேயர் மு.மகேஷ்குமார் இணையவழியில் சுய விவரங்களைப் பதிவு செய்தார்.

### என்.மருதுகணேஷ் தலைமை! ஆர்.டி.சேகர் – என்.ஆர்.இளங்கோ முன்னிலை!

# தி.மு.க.சட்டத்துறை சார்பில் மக்கள் விரோத த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி – சூர்யா வெற்றி கொண்டான் – தாயகம் கவி சிறப்புரை! கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

சென்னை, ஜூலை.25

தி.மு.க சட்டத்துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தும், மக்கள் விரோத த.வெ.க அரசை கண்டித்தும் மாபெரும் பொதுக்கூட்டம் (27.7.2026 திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில் ஏ.இ.கோயில் திடல், புதுவண்ணை, செ-81ல் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு சட்டத் துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் தலைமை வகிக்கிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், சட்டத் துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.விடுதலை, இ. பரந்தாமன், கே.எஸ்.ரவிச்சந்திரன், ஜெ.பச்சைய ப்பன், கே.சந்துரு, பெ. இரகு, ஜி.பொன்சந்திர போஸ், கே.ஜே.சரவணன், வீ.கவிகணேசன், மீஞ்சூர் கே.சுரேஷ்,

இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், தா.சிவராம், எஸ். பி.எஸ்.புத்தன், கே.பொம்முராஜ், எஸ்.எம்.டி.இரவிச்சந்திரன், எஸ்.சரவண குமார், எஸ்.தனசேகரன், எ.என்.புருஷோத்தம், மா.ரூபசங்கர், கோ.ஹரி ராமன், கே.பழனியப்பன், டி.முரளி, வி.கார்த்திக், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றுகிறார்.

சூர்யா வெற்றிகொண்டான்,சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, கலாநிதி வீராசாமி எம்.பி, தாயகம்கவி, ஜேஜே. எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, இரா. மதிவாணன், பி.டி.பாண்டிசெல்வம், இரா. நரேந்திரன், ஆர்.வெற்றிவீரன், தா.இளைய அருணா, ந.மனோகரன், இரா. கருணா, இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், க.ஜெயராம், அ.முருகன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி. தயாளன், வே.சிவக்குமார், கி.ராஜேந்திரன், சு.சேகர், நா.சண்முகம், கமலக்கண்ணன், ஏ.தமிழ்செல்வன், பா.மதிவாணன், கே.அமுல், டி.வி. முத்துகிருஷ்ணன், த.தமிழ்க்கொடி, கு.நற்குணன், நா.கஜேந்திரன், ஆதிசேஷன், இரா.பாஸ்கரன்,

வெ.சு.சத்தியநாராயணன், இர.பொன்இளவரசன், ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், வை. கௌதமன், இ.ரவிகுமார், ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், வி.வி.ரமேஷ், ஒலி ஒளி அ.பாபு, எம்.விமலா, வை.கலைவாணன், லட்சுமி வேலு, லியோ டி.சுரேஷ், லயன் எம்.தீனதயாளன், கார்த்திக் செங்குட்டுவன், கோ.சதிஷ், எஸ்.மோகன், வெ.இன்பரசன், எஸ்.சண்முகம், பி. சதிஷ்குமார், க.கோவிந்தசாமி, மு.அப்துல் ரகுமான், ஜெ.வசந்த்குமார், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி. கே.பி.சதிஷ்குமார், மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிடசெல்வி, பீ.ரீனிவாசன், கு.ரமேஷ், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், பி. தமிழ்செல்வன், ப.குமார், பொ.து.ராஜா, ஜெ.பிரேம் ஆனந்த், எஸ்.எல்.சுந்தர், நேதாஜி யு.கணேசன், கே. தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், இரா.பாலன், க. கலைசெல்வன் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செங்குன்றம் பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் என்.ஷாம் கார்த்திக் தாயார் என்.சின்னபாப்பா இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், ந.ஜெகதீசன், ஆர்.டி.சுதாகர், விப்ரநாராயணன், கே.கபிலன், பி.பால்ராஜ், கார்த்திக் கோடீஸ்வரன், சாந்தகுமார், திராவிடடில்லி, செ.யுவராஜ், டில்லி, ஸ்ரீதர், கிருஷ்ணகுமார், டேவிட், எம்.எஸ்.மணிகண்டன், ம.குறளரசன், பிரேம், தீ.லோகேஷ், ஆர்.ரமணன், சதீஷ், நவீன், ரூபேஷ், ஹரிஷ், நிதீஷ், ஐசக் மற்றும் கழக உடன்பிறப்புகள், இளைஞர் அணி தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### சென்னை வடக்கு மாவட்டம்; 40வது வட்டம்

# மாவட்டப் பிரதிநிதி டி.ஆர்.தணிகாசலம் மறைவு!

## இரங்கல் கூட்டம் – கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜூலை. 25

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி, 40வது வட்டம் மாவட்டப் பிரதிநிதி டி.ஆர்.தணிகாசலம் (வயது 61) அவர்கள் 22.07.26 புதன் கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் காலமானதை யொட்டி 23.7.2026 வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் காசிமேடு மயானத்தில் அன்னாரின் உடல் தகனம் செய்யபட்டது.


வட்டச் செயலாளர் நா. கோதண்டன் முன்னிலையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் புகழஞ்சலி செலுத்தியவர்கள் ஜே.ஜே. எபினேசர், இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், எம்.நாகராஜ், தா.வ.மு. கஜேந்திரன், எம்.ரூபசங்கர், பா.கோதண்டன், மா. பாஸ்கரன், ஜி.ராஜ்குமார், மு.சா.அரித்குமார், க.ஹேமந்த்குமார், ஆர்.வெங்கட், எஸ்.துரை, டி.எல்.பி.ரவி, இ.கருணாகரன், ஆர்.கிருஷ்ணன், த.சீனிவாசன், எம். கோவிந்தராஜ், ஆர்.கதிரேசன், எச்.மாரிமுத்து, லெனின் குமார், பத்மநாபன், எஸ். மணிகண்டன், மீஞ்சூர் முகுந்தன், டி.கணேசன், பா.மணி கண்டன், மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பே. மாரி அய்யா

**ஜூலை 25 (2020)**



கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்” என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் “மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா” என்றும் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கலியமூர்த்தி

**ஜூலை 25 (2011)**



பூதலூர் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

தஞ்சை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

பூதலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்புகளையும் திறம்பட வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**